பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 07 | திங்கட்கிழமை | 23.09.2024 | அதிர்வு 052

## அநுரவை நேரில் சந்தித்து வாழ்த்திய இந்தியத் தூதர்



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு 06



# புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு

## இன்று காலை பதவியேற்பு

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையில் இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று இரவு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 06

## தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப்பரீட்சை படுதோல்வியில்!

### இனியாவது அத்தகைய முயற்சியை கைவிடக் கோருகின்றார் சுமந்திரன்



தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப்பரீட்சை படுதோல்வி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., இனியாவது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் கைகூடுவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் அத்தரப்பினர் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஒட்டித் தாம் வெளியிட்ட சிறு அறிக்கையிலேயே அவர் இதனைக் 06





புதிய ஜனாதிபதி பதவியேற்கும் நாள் இன்று. அதனை ஒட்டி ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுவது – நினைவூட்டுவது – பொருத்தமானது.

பெயர் மாற்றினால் ஆள் மாறிவிடுமா? இல்லையே.!

'ஜே.வி.பி.' என்பது இப்போது சில பல கூட்டுகளோடு சேர்ந்து 'தேசிய மக்கள் சக்தி' யாகிவிட்டது. அந்தப் பெயர் மாற்றம் பழைய ஜே.வி.பிக்கு பாவ விமோசனம் தந்து விடுமா என்பது கேள்வியே.

பழைய ஜே.வி.பியின் – புதிய தேசிய மக்கள் சக்தியின் – தலைவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் இச்சமயத்தில் அக்கட்டமைப்பு குறித்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் – 2004 இல் – தமிழீழத் தேசிய தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் ஆற்றிய விடயங்களை நினைவூட்டுவது 06



# பாசம் மிகுந்த குழந்தையினை உங்களிடம் ஒப்படைக்கிறேன்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவிப்பு

“அநுர திஸாநாயக்க ஜனாதிபதி அவர்களே, நான் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊடங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின்படி, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் எனவும், அவருக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட ஊடக அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“வணக்கம்.. அன்புள்ள பிரஜைகளே, செப்டம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்மானமொன்றை வழங்கியுள்ளனர். நாம் அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன்.

அந்த சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயே நான் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டேன்.

வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பினை நான் சிறப்பாக நிறைவேற்றினேன். இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டினை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது.

எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காக செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன். நான் நாட்டைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் நூற்றுக்கு எழுபது வீதமாகக் காணப்பட்ட பணவீக்கத்தினை பூச்சியம் தசம் ஐந்து (0.5 வீதம்) வரை என்னால் குறைக்க முடிந்தது.

இருபது மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட இந்நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பினை ஐந்து தசம் ஏழு பில்லியன் அமெரிக்க டொலராக என்னால் அதிகரிக்க முடிந்தது.

அத்துடன் டொலருடன் ஒப்பிடுகையில் முன்னூற்று எண்பதாகக் காணப்பட்ட ரூபாயின் பெறுமதியை முந்நூறு ரூபா வரை குறைத்து, பலமான நிலையான பெறுமதிக்கு என்னால் அதனைக் கொண்டு வர முடிந்தது.

அத்துடன் மறை ஏழு தசம் மூன்றாக (-7.3வீதம்) காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியை நேர் இரண்டு தசம் மூன்று (2.3 வீதம்) வரை அதிகரிப்பதற்கு நான் நடவடிக்கை மேற்கொண்டேன். அதுபற்றியும், எனது அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க அரசியல் கடமைப் பொறுப்பு பற்றியும் இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினர் உரிய மதிப்பீடொன்றை வழங்குவார்கள் என நம்புகிறேன்.

இந்த நாட்டின் ஆட்சியாளர் என்ற வகையில் வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

நான் சரியான பாதையில் சென்று மக்களின் துயரங்களை முடிந்தளவு நீக்கினேன். புதிய ஜனாதிபதி அவர்களும் அவருக்குக் கிடைத்த மக்கள் ஆணையின் பிரகாரம் சரியான பாதையினைத் தெரிவு செய்து மக்களின் துயரங்களை நீக்குவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

மிகவும் சவால் மிகுந்த தொங்குபாலத்தில் இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையினை நான் முடிந்தளவு அதிகபட்ச தூரம் பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன்.

தொங்குபாலத்தின் முடிவிடம் கண்களுக்கு மிகவும் எட்டும் தூரத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த பாசம் மிகுந்த குழந்தையினை அனுர குமார திஸாநாயக்க அவர்களிடம் ஒப்படைப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அநுர ஜனாதிபதி அவர்களே, நீங்களும் நானும் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் மிகவும் கருணையுடன் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு வந்தததை விடவும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் முடிவிடத்திற்கு கொண்டு செல்லும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பதவிகளை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை ஏற்புடைய சந்தர்ப் பங்களில் எந்த விதமான தயக்கமுமின்றி நான் நிறைவேற்றுவேன்.

அத்துடன், எனது ஆட்சிக் காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும், இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.”– என்று குறிப்பிட்டுள்ளார்.




# ஒன்றிணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுதத் தயாராக நிற்கிறோம்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

“நம்பிக்கையினாலும் எதிர்பார்ப்பினாலும் நிரம்பிய கோடிக் கணக்கான கண்கள் எம்மை முன்னோக்கித் தள்ளுகின்றன, ஒன்றிணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுதத் தயாராக நிற்கிறோம்.”

– இவ்வாறு நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

2024 ஜனாதிபதி தேர்தல் முடிவுகளுக்கு அமைய நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்கவை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்று அறிவித்தார்.

இதையடுத்து அநுரகுமார திஸாநாயக்க தனது டுவிட்டர் பக்கத்தில் மக்களுக்கு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“பல நூற்றாண்டுகளாக நாம் வளர்த்து வந்த கனவு இறுதியாக நனவாகும். இந்த சாதனை எந்த ஒரு நபரின் உழைப்பின் விளைவு அல்ல, நூறாயிரக்கணக்கான உங்களின் கூட்டு முயற்சி. உங்கள் அர்ப்பணிப்பு எங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ளது. அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த வெற்றி நம் அனைவருக்கும் சொந்தமானது.

இந்த நோக்கத்திற்காக தங்கள் வியர்வையையும், கண்ணீரையும், தங்கள் வாழ்க்கையையும் கூட அர்ப்பணித்த பலரின் தியாகத்தால் எங்கள் பயணம் செதுக்கப்பட்டுள்ளது. அவர்களின் தியாகங்கள் மறக்கப்படவில்லை. அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் போராட்டங்களின் செங்கோலை நாங்கள் தாங்குகிறோம் – அது சுமக்கும் பொறுப்பை அறிந்தே. நம்பிக்கையினாலும் எதிர்பார்ப்பினாலும் நிரம்பிய கோடிக் கணக்கான கண்கள் எம்மை முன்னோக்கித் தள்ளுகின்றன, ஒன்றிணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுதத் தயாராக நிற்கிறோம்.

இந்த கனவை புதிய தொடக்கத்தில் மட்டுமே நனவாக்க முடியும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் அனைத்து இலங்கையர்களின் ஒற்றுமையே இந்தப் புதிய தொடக்கத்தின் அடித்தளமாகும். நாம் தேடும் புதிய மறுமலர்ச்சி இந்த பகிரப்பட்ட வலிமை மற்றும் பார்வையிலிருந்து எழும்.

நாம் ஒன்றாக இணைந்து இந்த எதிர்காலத்தை வடிவமைப்போம்!” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் மாவட்ட ரீதியான விருப்பு வாக்குகள் விவரம்

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நேற்று இரண்டாவது சுற்றில் எண்ணப்பட்ட மாவட்ட ரீதியான விருப்பு வாக்குகளின் முடிவுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன. அவற்றின் படி எல்லா மாவட்டங்களிலும் எண்ணப்பட்ட விருப்பு வாக்குகளில் அதிகமானவை சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்துள்ள போதிலும் அந்த மேலதிக வாக்குகள் ஏற்கனவே முதல் சுற்றில் அநுரகுமார திஸாநாயக். பெற்ற சுமார் 13 லட்சம் மேலதிக வாக்குகளை மேவுவதற்குப் போதுமானவையல்ல என்பதால், இந்தத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

**01. ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 3,093 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 1,763 |

**02.மாத்தளை மாவட்டம்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 2,211 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 1,909 |

**03.திகாமடுல்ல**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 4,814 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 3,391 |

**04. மாத்தறை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 4,505 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 3,130 |

**05. பதுளை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 4,760 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 3,437 |

**06. மொனராகலை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 1,820 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 1,395 |

**07.மட்டக்களப்பு**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 7,191 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 4,467 |

**08. வன்னி**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 6,162 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 2,390 |

**09. அநுராதபுரம்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச : | 3,537 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 2,773 |

**10.புத்தளம்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 3,103 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 2,149 |

**11. காலி**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 5,828 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 4,714 |

**12.கேகாலை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 4,314 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 3,869 |

**13. நுவரெலியா**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 5,440 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 3,162 |

**14. யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச : | 21,511 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 8,174 |

**15. இரத்தினபுரி**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 6,022 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 4,888 |

**16. குருநாகல்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 7,920 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 6,408 |

17.கண்டி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 9,188 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 8,020 |

**18.கொழும்பு**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ : | 35,488 |
| அநுரகுமார திஸாநாயக்க : | 17,902 |

**19. களுத்துறை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ – | 8,517 |
| அநுரகுமார திஸாநாயக்க – | 6,135 |

**20.கம்பஹா**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ – | 16,683 |
| அநுரகுமார திஸாநாயக்க – | 12,217 |

**21.திருகோணமலை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ – | 4,119 |
| அநுரகுமார திஸாநாயக்க – | 1,930 |

**22.பொலனறுவை:**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ – | 1,641 |
| அநுரகுமார திஸாநாயக்க – | 1,041 |

# அநுரவின் வெற்றி சமூகநீதியை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும்

## மனோ கணேசன் நம்பிக்கை



"அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலின் முதலாவது வாக்குகள் எண்ணப்பட்டு வெளியான முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இருந்த வேளையில், அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கூறி தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளப்பக்கத்தில் பதிவொன்றை மனோ கணேசன் வெளியிட்டிருந்தார்.

அவர் அந்தப் பதிவில் மேலும் குறிப்பிடுகையில் –

"மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். அதேபோன்று சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாம் கடுமையாகப் பணியாற்றிய மத்திய, மேல், சப்ரகமுவ, ஊடக மாகாணங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

ஜனநாயக செயன்முறை வெளிப்பட்டிருக்கிறது. அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும் என நம்புகிறேன்." – எனத் தெரிவித்திருக்கிறார்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவும் மக்களுக்கு நன்றி தெரிவிப்பு




தேர்தலின் போது அமைதியான முறையில் செயற்பட்டமைக்காக மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றார் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் , ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியான பின்னரும் மக்கள் அமைதியாகச் செயற்படுமாறு, தேர்தல் முடிந்து ஒரு வாரத்திற்கு கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# அநுர குமாரவுக்கு அமெரிக்கா வாழ்த்து



ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றிக்காக அமெரிக்கா அனுரகுமார திஸநாயக்கவிற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக்காக இலங்கை மக்களை பாராட்டுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் இணைந்து செயற்பட தயார் எனவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாலப் பொருத்தமானதாகும். இந்த உரை ஆற்றப்பட்ட சமயத்தில் ஜே.வி.பியைப் பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பியான இதே அநுரகுமார திஸநாயக்கா, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக பணியாற்றினார்.

இனி தலைவர் பிரபாவின் கூற்றை நோக்குவோம்.

"இனவாதமும் மதவாதமும் பழமைவாதக் கம்யூனிசமும் ஒன்றுகலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.) இத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றிபெற்றது.

இந்த இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது."

– என்று கூறியிருந்தார் தலைவர் பிரபாகரன்.

சுனாமி ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கைகளுக்காக புலிகளுடன் சேர்ந்து சந்திரிகா ஒரு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தினார். அதை ஆட்சேபித்து சந்திரிகா அரசிலிருந்து அப்போதைய ஜே.வி.பி. – இதே அநுரகுமார திஸநாயக்காவையும் எம்.பியாகக் கொண்டிருந்த அந்தக் கட்சி – வெளியேறித் தனது பேரினவாத வெறித்தனத்தை வெளிப்படையாக பிரகடனப்படுத்தி நின்றது என்ற நினைவு எனக்குண்டு.

தமிழர் விரோதக் கட்சி என்றும், இனவாதக் கட்சி என்றும் தலைவர் பிரபாகரனினால் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு தரப்பின் எம்.பியைத் தான் இன்று நாட்டின் ஜனாதிபதியாக்குவதற்கு தமிழர்களும் கணிசமாகச் சேர்ந்து வாக்களித்திருக்கின்றார்கள்.

அந்த நிலைப் போக்கிலிருந்து ஜே.வி.பி. தன்னை மாற்றிக் கொண்டு விட்டதா என்பதை புதிய ஜனாதிபதி தமது நடவடிக்கைகள் மூலம் – செயற்பாடுகள் வாயிலாக – வெளிப்படுத்தி காட்டுவது பொருத்தமானது. அவர் செய்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்...!

## அநுரவை நேரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இந்தியத் தலைமைத்துவத்தின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், மக்களின் ஆணையை வென்றமைக்காகப் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

பல நாகரிக ஒற்றுமைகளைக் கொண்டுள்ள இரட்டையராகவும், நமது இரு நாடுகளினதும் மக்களது செழுமைக்காக உறவுகளை மேலும் வலுவாக்கவும் இந்தியா உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.







## தமிழ்ப் பொது வேட்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையை ஏற்று, சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்து, வடக்கு – கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் அவர் வெல்வதை உறுதி செய்த வாக்காளர்களுக்கு எங்களுடைய நன்றிகள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாரை ஆதரிக்கக் கூடாது என்றும், யாரை ஆதரிக்க வேண்டும் என்றும் எடுத்த தீர்மானம் சரியானது என்பதை தமிழ் மக்கள் தமது வாக்களிப்பினால் அங்கீகரித்துள்ளார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப் பரீட்சை படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அதை முன்னிறுத்தியோர் இனிவரும் நாள்களில் அத்தகைய முயற்சியை தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் கைகூடுவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றுள்ளது.

## புதிய ஜனாதிபதியாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தல் வாக்குகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 (42.31%) வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருந்தார்.

இரண்டாவது இடத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 43 இலட்சத்து 63 ஆயிரத்து 35 (32.76%) வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் இருந்தார்.

ஜனாதிபதியும் சுயேச்சை வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க 22 இலட்சத்து 99 ஆயிரத்து 767 (17.27%) வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்தார்.

இந்நிலையில், எவரும் 50 சதவீதமான வாக்குகளைப் பெறாத நிலையில், விருப்பு வாக்கின் அடிப்படையில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நிலை ஏற்பட்டது.

அதற்கமைய 22 தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாக வைத்து விருப்பு வாக்கு கணக்கெடுப்பு இடம்பெற்றது.

விருப்பு வாக்கு கணக்கெடுப்பில் அகில இலங்கை ரீதியாக சஜித் பிரேமதாஸவுக்கு ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 867 வாக்குகளும், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 183 வாக்குகளும் கிடைத்தன.

இறுதியில் 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 முதல் சுற்று வாக்குகளுடன் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 183 விருப்பு வாக்குகளைச் சேர்த்து மொத்தமாக 57 இலட்சத்து 40 ஆயிரத்து 98 வாக்குகளைப் பெற்று அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சஜித் பிரேமதாஸ 43 இலட்சத்து 63 ஆயிரத்து 35 முதல் சுற்று வாக்குகளுடன் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 867 விருப்பு வாக்குகளைச் சேர்த்து மொத்தமாக 45 இலட்சத்து 33 ஆயிரத்து 902 வாக்குகளைப் பெற்றார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக இன்று காலை அநுரகுமார திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

# தேசிய நெருக்கடியின் போது ஜனாதிபதியுடன் இருந்தமையை பெருமையாகக் கருதுகின்றோம்

## ரணில் ஆதரவுத் தரப்பு கருத்து






தேசிய நெருக்கடியின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றியமையைப் பெருமையாகக் கருதுகின்றனர் எனவும், தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிர்காலத்தை சிறந்த முறையில் கொண்டு செல்ல வாழ்த்துகின்றனர் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த முக்கிய தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தனது எக்ஸ் தளப் பதிவில் –

"தேசிய நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்கவின் குழுவில் இருந்தமையிக் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. மக்கள் கொடுத்த அதிகாரத்தை அவரின் வழிகாட்டுதலின் கீழ் பயன்படுத்தினேன். எந்த விடயமாக இருந்தாலும், நாங்கள் தொடங்கியதை முடிக்க உறுதிபூண்டுள்ளோம். ரணிலுக்கு எனது வாழ்த்துக்கள்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தனது பதிவில் –

"இலங்கையின் 9ஆவது நிறைவேற்றனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்காக அநுரகுமார திஸநாயக்கவைப் பாராட்டுகிறேன். இலங்கை மக்கள் பேசுகின்றனர். மற்றும் ஜனநாயகம் வென்றுள்ளது. நமது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு வருங்கால ஜனாதிபதிக்குப் பலமும், விவேகமும், தைரியமும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சப்ரகமுவ மாகாண ஆளுநர் பதவியை நான் விரைவில் இராஜினாமாச் செய்வேன்." – எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தனது பதிவில் –

"அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். இலங்கை அரசியல் வரலாற்றில் இல்லாத ஒரு சமூக புரட்சியை அநுர உருவாக்கியுள்ளார். அவருடைய கொள்கைகளுடன் நாம் முரண்பட்டவர்களாக இருக்கிறோம். அவர் நாட்டுக்காக ஒரு சிறந்த சேவையைச் செய்வார் என்று நம்புவோம்." – எனக் குறிப்பிட்டுள்ளார்.




# வளமான இலங்கையைக் கட்டியெழுப்பும் ரணிலின் அர்ப்பணிப்புக்குப் பெரும் நன்றி

## ஷெஹான் சேமசிங்க கூறுகின்றார்

"ஸ்திரமான மற்றும் வளமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குமான அவரது அயராத முயற்சிகள் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் செய்துள்ள பதிவில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் பாரிய சவாலை துணிச்சலுடன் ஏற்றுக்கொண்ட தருணத்திலிருந்து அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றமையையிட்டு நான் பெருமையடைகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், அவர் இந்த நெருக்கடியை சமாளிப்பது மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரத்தையும் மாற்றியுள்ளார். சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வளர்ப்பதற்கும் அவரது அயராத முயற்சிகள் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை.

ஸ்திரமான மற்றும் வளமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளித்து வாக்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்."– என்று குறிப்பிட்டுள்ளார்.




# ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை ஒட்டி தமிழ் மக்கள் பொதுச் சபை அறிக்கை

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை ஒட்டி தமிழ் மக்கள் பொதுச் சபை நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

தமது விடுதலைக்காகத் தொடர்ச்சியாகப் போராடிவரும், அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்கள் சிறீலங்கா அரசு ஒழுங்குபடுத்தும் ஒரு தேர்தலில், தமது ஆள்புல எல்லைக்குள் எப்படித் தம்முடைய கூட்டு விருப்பை வெளிப்படுத்தலாம் என்பதற்கு ஆசியாவின் ஆகப்பிந்திய உதாரணம்தான் தமிழ் பொது வேட்பாளர் ஆகும். அரசாங்கம் அறிவித்த ஒரு தேர்தல் களத்தை எப்படி ஓர் அரசற்ற மக்களாகிய தமிழ் மக்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தங்களுடைய அபிலாசைகளை ஒருமித்த குரலில் சொல்வதற்கும் பயன்படுத்தலாம் என்று சிந்தித்துக் களம் இறக்கப்பட்டவர்தான் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் ஆகும்.

தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற கோஷத்தோடு களமிறக்கப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். அவர் சட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கை உணர்வுபூர்வமாக இணைக்கும் ஒரு குறியீடாக எழுச்சி பெற்றுள்ளார். வடக்கில் அவருக்கு கிடைத்த வாக்குகள் தாயக ஒருமைப்பாட்டை பலப்படுத்த விரும்புபவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவை.

தமிழ்ப் பொது வேட்பாளர் வடக்கையும் கிழக்கையும் இணைப்பது மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் உள்ள மக்கள் அனைவரையும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு களம் இறக்கப்பட்டார்.

அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றார். கடந்த 15 ஆண்டுகளிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஏதோ ஓர் ஒருங்கிணைவு ஏற்பட்டிருக்கிறது. தாயகத்தில் தமது உறவுகளின் ஊடாக பொது வேட்பாளரை பலப்படுத்துவதில் அவர்கள் அதிகம் பங்களித்துள்ளார்கள். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் பல வழிகளிலும் உதவிகளைப் புரிந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பலப்படுத்தும் ஒரு தேர்தல் களம் என்ற அடிப்படையில் பிரச்சார நடவடிக்கைகளில் ஒருவித தன்னதிகாரம் அனுமதிக்கப்பட்டது. தன்னியல்பான, தன்னெழுச்சியான செயற்பாடுகள் தடுக்கப்படவில்லை. அதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருந்தும் தாயகத்திலும் தமிழ் மக்கள் அவரவர் கொள்ளளவுக்கு ஏற்பவும், அவரவர் சக்திக்கு ஏற்பவும்,விருப்பத்திற்கு ஏற்பவும், அவரவர் அரசியல் புரிதல்களுக்கு ஏற்பவும் பிரச்சார நடவடிக்கைகளில் பங்களித்திருக்கிறார்கள். ஒரு மையத்திலிருந்து கட்டுப்படுத்தப்படாத இப்போக்குக் காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய சில குழப்பமான தோற்றப்பாடுகளை தமிழ் மக்கள் பொதுச்சபை விளங்கிக் கொள்கின்றது. எனினும் மக்கள் தன்னார்வமாக பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தமை நமக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்தது.

தமிழ் மக்கள் பொதுச்சபை என்பது தமிழ் அரசியலில் நிர்ணயகரமான ஒரு தாக்கத்தைச் செலுத்தும் மக்கள் அமைப்பாகக் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்ற நீண்ட கால இலக்கோடு தொடங்கப்பட்ட ஒரு மக்கள் அமைப்பாகும். தேசத்தை கட்டியெழுப்பும் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகவே ஒரு பொது வேட்பாளர் தேர்தலில் இறக்கப்பட்டார்.

ஒரு மக்கள் அமைப்பும் கட்சிகளும் இணைந்து தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்தியமை என்பது தமிழ் அரசியலில் ஒரு புதிய போக்கு. ஒரு புதிய பண்பாடு. இந்தப் பண்பாட்டை தொடர்ந்தும் பலப்படுத்தி வளர்ப்பதற்கு தேர்தல் முடிவுகளுக்கும் அப்பால் அர்ப்பணிப்பும் தெளிவான தூர இலக்கும் இருக்க வேண்டும் என்று நம்புகின்றோம். தேசத்தை கட்டியெழுப்பும் பணிகள் தேர்தல் வெற்றிகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதனை தமிழ்மக்கள் பொதுச்சபை நன்கு விளங்கி வைத்திருக்கின்றது. தேர்தல் நடவடிக்கைகள் தேசத்தை கட்டி எழுப்பும் நடவடிக்கைகளில் ஒரு பகுதி மட்டுமே. அதற்குமப்பால் தேசத்தை கட்டியெழுப்புவது என்பது அதைவிட ஆழமான பொருளில், பரந்தகன்ற தளத்தில், நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு தொடர்ச்சியான அரசியல் முன்னெடுப்பு என்பதனை நாம் நான்கு விளங்கி வைத்திருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு கிடைத்த ஆதரவு அந்தப் பணியில் நம்மை தொடர்ந்து முன்னோக்கிச் செலுத்தும் ஊக்க சக்தியாக அமையும் என்று நம்புகின்றோம். இந்த விடயத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் நமக்கு உதவி புரிந்த நமது மக்கள் அமைப்பின் உறுப்புக்களாக உள்ள அமைப்புகளுக்கும், தனிநபர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கட்டமைப்புக்கு வெளியிலிருந்து எமக்குத் தன்னார்வமாக உதவி புரிந்த தனி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் நன்றி.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுக்கும் நன்றி.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புக்குள் அங்கம் வகிக்காத போதிலும் கட்சி கடந்து பரப்புரைகளில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் நன்றி.

புலம்பெயர்ந்த பரப்பில் இருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் நமக்கு பல்வேறு வழிவகைகளிலும் உதவி புரிந்த உற்சாகமூட்டிய அனைத்துத் தரப்புகளுக்கும் நன்றி.

மிகக்குறுகிய காலத்துக்குள் எமது அரசியல் செய்தியை உலகமெல்லாம் பரப்பிய ஊடகவியலாளர்களுக்கு நன்றி.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸநாயக்கவுக்கு எமது வாழ்த்துகள். தமிழ் மக்களின் இறைமையையும் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரித்தால்தான் இலங்கைத் தீவின் பல்லினச் சூழலைப் பாதுகாக்கலாம் என்பதனை புதிய ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் பொதுச் சபையாகிய நாம், தேசத்தைக் கட்டி எழுப்பும் உன்னதமான ஒரு வழியில் முதலாவது படியை கடந்திருக்கின்றோம். தமிழ்ப் பொது வேட்பாளரால் ஒன்று திரட்டப்பட்ட கூட்டுணர்வையும், நம்பிக்கையும், தமிழ்த் தேசிய ஐக்கியத்தையும் தொடர்ந்து பலப்படுத்துவோம். பாதுகாப்போம். – என்று உள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# புதிய ஜனாதிபதியின் அணுகு முறைமை

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் நேற்று விடுத்தார்.

இதனையடுத்துபுதியஜனாதிபதிஅநுரகுமார திஸநாயக்க இன்று காலை கொழும்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் எளிமையான பதவியேற்பு வைபவத்தில் சத்தியப்பிரமாணம் செய்து ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார்.

இந்த ஜனாதிபதித் தெரிவும் பதவியேற்பும் இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய மற்றும் தீர்க்கமான அத்தியாயத்தின் ஆரம்பத்தை அடையாளம் காட்டி நிற்கின்றன என்பது உண்மையே.

இதுவரை ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு எதிராகப் போட்டியிட்ட தேர்தலில் 55 வயதான திஸாநாயக்கவிற்கு வெற்றி கிடைத்துள்ளது.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசியல் வாழ்க்கை 1988 இல் சமூக மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளராக ஆரம்பித்து மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீண்டுள்ளது.

ஜனதாவிமுக்திபெரமுனாவின்(ஜே.வி.பியின்) கீழ் மட்டத் தரவரிசையில் இருந்து அவர் உயர்ந்து, 1995 இல் அதன் மத்திய செயற்குழுவில் சேர்ந்தார். 2001 இல் அக்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2004 மற்றும் 2005 க்கு இடையில், அவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக பணியாற்றினார்.

அநுராதபுரத்திலுள்ள தம்புத்தேகன மத்திய கல்லூரியின் மாணவரான திஸாநாயக்க, களனிப் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் பட்டம் பெற்றவர்.

இந்தப் புதிய ஜனாதிபதியின் வயதும் அவரது கட்சியின் சரிதத்தின் தொடக்கமும் ஒன்றாகும்.

அன்று முதல் அக்கட்சிக்கு இது வரை இருவரே தலைமை தாங்கியுள்ளனர்.

ஒருவர் - கட்சியின் ஸ்தாபகரான றோஹண விஜேவீர. மற்றவர் சோமவன்ஸ அமரசிங்க.

சோமவனஸ அமரசிங்கவுக்குப் பிறகு 2014 இல் அநுரகுமார திஸநாயக்க ஜே.வி.பி.யின் தலைவராக பதவியேற்றார். அவர் இப்போது ஜனாதிபதியாகின்றார்.

அவரது சக்திவாய்ந்த சொல்லாட்சி மற்றும் சமூக நீதி, இறையாண்மை மற்றும் வெளிப்படையான நிர்வாகத்திற்காக வாதிடும் உறுதி, ஊழல் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற பிரச்சினைகளில் நீண்ட காலமாக ஒரு முக்கிய குரலாகப் பணியாற்றுகின்றமை மெச்சத்தக்கவை.

நாட்டின் ஜனநாயக ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் அதே வேளையில், இலங்கை எதிர்கொள்ளும் அழுத்தமான பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுப்பதில் அவரது தலைமை கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் நிறைவேற்றதிகாரம் முதல் தடவையாக இடதுசாரி தலைவர் ஒருவரின் கைகளுக்கு மாறுகின்றது.

இந்த மாற்றம் அவரே குறிப்பிடுகின்றமை போல இலங்கையின் வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக அமையக் கூடியது.

'தீக்குச்சை வைத்து விளக்கையும் ஏற்றலாம் வீட்டையும் எரிக்கலாம்.'

நிறைவேற்றதிகாரமும்அத்தகையஒரு தீக்குச்சியே. அதனைப் பயன்படுத்தி நாட்டை செழுமைப்படுத்துவதோ அல்லது இழிவுக்கு உள்ளாக்குவதோ புதிய ஜனாதிபதியின் அணுகுமுறையிலும் ஆட்சி அதிகார நிர்வாகத்திலும் தான் தங்கி இருக்கின்றது.

# அனைத்து தரப்பைச் சேர்ந்த மக்களையும் விஜய் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே

## எல்.முருகன் கூறுகின்றார்



அனைத்து தரப்பு மக்களையும் விஜய் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குன்றத்தூர் அடுத்த கொளப்பாக்கத்தில் உள்ள தனியார் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரே நாடு ஒரே தேர்தல் இந்த நாட்டிற்கு காலத்தின் கட்டாயம். இதற்காக பெரிய அளவில் கமிட்டி அமைக்கப்பட்டு கருத்து கேட்டு அதன் அடிப்படையில் வரலாற்று சிறப்புமிக்க அறிக்கை தந்துள்ளார்கள். மறைந்த முதல்வர் கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் அவசியத்தை உணர்த்தி இருக்கிறார்.

முதல்வரையும், துணை முதல்வராக வர துடித்து கொண்டிருக்கிற உதயநிதி ஸ்டாலின், கனிமொழி எஸ்.சி, எஸ்.டி விடுதியை பார்க்க வேண்டும். அடிப்படை வசதிகள் எதுவுமே கிடையாது. தமிழர் ஒருவர் நாட்டை ஆள வேண்டும் என்பது வரவேற்கக் கூடியது. பெரிய தேசம் யார் வேண்டுமானாலும் ஆளலாம்.

பல்வேறு சூழ்நிலை காரணமாக மீனவர்கள் எல்லை தாண்டி போகிறார்கள். பிரதமர் மோடி வந்த பிறகு துப்பாக்கி சூடு சம்பவம் ஏதும் இல்லை. மீனவர்களை உடனடியாக மீட்டுக் கொண்டு வருகிறோம்.

விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்து சொல்லவில்லை, ஈவேராவிற்கு மாலை செலுத்தினார். விஜய் பொதுவான நபராக இருப்பாரா என்பது கேள்விக்குறி. அரசியல் கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்றால் அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து சொல்லக்கூடிய தலைவராக இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு அரசியல் கட்சியை நிர்வகிக்க முடியும். அவர் அனைத்து தரப்பு மக்களையும் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே.” என தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணியை சிதறடிப்பதே பா.ஜ.கவின் நோக்கமாக உள்ளது

## திருமாவளவன் குற்றச்சாட்டு




தி.மு.க. கூட்டணியை சிதறடிப்பதே பா.ஜ.கவின் நோக்கமாக உள்ளது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

விருதுநகரில் பல்வேறு இடங்களில் விடுலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கொடியேற்றும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,


“தமிழக அரசும் மதுவிலக்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். பா.ஜ.க. ஆளும் உத்திரப்பிரதேசத்தில் மதுவிலக்கு இருக்கிறதா? இந்த கேள்விக்கு பா.ஜ.கவினர் பதில் அளித்தார்களா? குஜராத்தில் மது விலக்கு நடைமுறையில் உள்ளது. அது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. காந்தியடிகளை மதிக்கும் வகையில் குஜராத்தில் மட்டும் அது நடைமுறையில் உள்ளது.

ஆனால், பா.ஜ.க. ஆளும் எந்த மாநிலத்திலும் மதுவிலக்கு கொள்கை இல்லை. இதனால் கடுமையாக பாதிக்கப்படுவது, இவர்கள் மொழியில் சொல்லப் போனால் இந்துக்கள்தான். இளம் தலைமுறையினர் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். இளைஞர்களைப் பாதுகாக்க பா.ஜ.க. என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? மாநில அரசு மீது பழிபோட்டுவிட்டு மத்திய அரசு கண்டும் காணாமல் உள்ளது.

தமிழகத்தில் நாங்கள் ஆளும் கட்சி கூட்டணியில் இருக்கிறோம். ஆனாலும், அரசுக்கு நெருடலை ஏற்படுத்தும் பிரச்சினையை கையில் எடுத்துள்ளோம். இதையே அவர்கள் கேலி செய்கிறார்கள் என்றால் அவர்கள் நோக்கம் மக்கள் நலன் அல்ல. தி.மு.க. கூட்டணியை சிதறடிப்பதாகத்தான் உள்ளது.

விஜய் மாநாடு நடத்துவதை வரவேற்கிறேன். அவருக்கு எனது வாழ்த்துகள். ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதை கடுமையாக எதிர்க்கிறோம். குடியரசு தலைவர் ஆட்சியை கொண்டுவர அவர்கள் முயற்சிக்கிறார்கள். கமல் மீண்டும் மக்கள் நீதி மையத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதற்காக வாழ்த்துகிறேன்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் அரியனேந்தன் போட்டியிட்டார். அவருக்கு வாக்களிக்க வேண்டும் என நான் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அவர் வெற்றிபெற முடியாது என்பது தெரியும். இருந்தாலும் அவரை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினேன். தற்போது ஜே.விபி அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தேர்தெடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் தமிழர்களுக்கு ஆதரவானவர் என்று சொல்ல முடியாது. காத்திருந்து பார்ப்போம்.” – என்றார்.



# உக்ரைன் போர், காசா மீதான தாக்குதல் கவலை தருகின்றன; குவாட் தலைவர்கள்

உக்ரைனில் நடைபெற்று வரும் போரும், காசா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் மிகவும் கவலை அளிப்பதாக அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 4 நாடுகளின் கூட்டமைப்பான குவாட்-ன் உச்சிமாநாடு அமெரிக்காவின் வில்மிங்டன் நகரில் நடைபெற்றது.

இதில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி அல்பனீஸ், ஜப்பான் பிரதமர் கிஷிடா ஃபியூமியோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல், இந்தோ-பசுபிக் கடல் பிராந்திய பாதுகாப்பு, உலக சுகாதார பாதுகாப்பு, தொற்றுநோய் தயார் நிலை, தரமான உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் சுரங்கத்தில் வெடி விபத்து: 50 பேர் உயிரிழப்பு, 20 பேர் காயம்



ஈரானின் தெற்கு கொராசன் பிராந்தியத்தில் உள்ள சுரங்கத்தில் எரிவாயு வெடித்து நடந்த விபத்தில் 51 பேர் உயிரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் நேற்று தெரிவித்தன.


விபத்து நடந்த பகுதியில் இயங்கி வரும் மாதன்ஜோ நிறுவனத்தால் நடத்தப்படும் சுரங்கத்தில் உள்ள "பி" மற்றும் "சி" பிளாக்குகளில் மீத்தேன் வாயு வெடித்ததால் இந்த விபத்து நடந்துள்ளது என்று அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து குறித்து தெற்கு கொராசன் பிராந்தியத்தின் கவர்னர் அலி அக்பர் ரஹிமி கூறுகையில், "நாட்டின் ஒட்டுமொத்த நிலக்கரி பயன்பாட்டில் 76 சதவீதம் இந்தப் பகுதியில் இருந்தே பெறப்படுகிறது. இங்கு மதான்ஜூ நிறுவனம் உட்பட 8 முதல் 10 பெரிய நிறுவனங்கள் இங்கு இயங்கி வருகின்றன.

பி பிளாக்கில் மீட்பு பணிகள் நிறைவடைந்து விட்டன. அங்கு பணியில் இருந்த 47 பணியாளர்களில் 30 பேர் உயிரிழந்து விட்டனர். 17 பேர் காயமடைந்துள்ளனர். சி பிளாக்கில் மீட்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மீத்தேன் அடர்த்தி மிகவும் அதிகமாக உள்ளது. அதனால் மீட்புப் பணிகள் நிறைவடைவதற்கு அதிக நேரம் எடுக்கும்" என்று தெரிவித்தார். விபத்து நடப்பதற்கு முன்பு அங்கு 69 பேர் பணியில் ஈடுபட்டிருந்ததாக அரசுத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதனிடையே ஈரானின் ரெட் கிரசண்ட் தலைவர் கூறுகையில், "காயமடைந்த 17 பேர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் 24 பேர் காணாமல் போய் உள்ளனர்" என்று ஞாயிற்றுக்கிழமையின் முற்பகுதியில் தெரிவித்திருந்தார். இந்த வெடி விபத்து சனிக்கிழமை இரவு 9 மணிக்கு நடந்துள்ளது.

விபத்து குறித்து ஈரான் ஜனாதிபதி மசூத் பெஜெஸ்கியன் கூறுகையில், "வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமைச்சர்களுடன் பேசினேன். தொடர்ந்து எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்வோம்" என்று தெரிவித்துள்ளார்.





# தமிழரசு எதிர் பொதுக் கட்டமைப்பு: இந்தப் போட்டியில் வென்றது யார்?



புருஜோத்தமன் தங்கமயில்

"தமிழ்ப் பொது வேட்பாளரான பாக்கியசெல்வம் அரியநேத்திரன், தமிழர் தாயகத்தில் ஐந்து லட்சத்துக்கும் குறையாமல் வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அப்போதுதான், அது தமிழ்த் தேசிய அரசியலின் வெற்றியாக பார்க்கப்படும்...." என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம்சிறீதரன்அண்மையyoutubeசெவ்வியொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தப் பத்தியாளரோ, சில வானொலிச் செவ்விகளில் 160,000 முதல் 180,000 வரையான வாக்குகளை அரியநேத்திரன் பெறுவார் என்று கூறி வந்திருக்கிறார். ஆனால், இந்தப் பத்தியாளர் எதிர்வுகூறியதைக் காட்டிலும் 46,343 வாக்குகளை அவர் அதிகம் பெற்றிருக்கிறார்.

அதேவேளை, பொது வேட்பாளருக்காக சொந்தக் கட்சியின் முடிவுக்கு எதிராக நின்று வாக்குச் சேகரித்த சிறீதரனின் 'ஐந்து லட்சம் வாக்குகள்' என்ற எதிர்பார்ப்பில், அரைவாசியைக்கூட, அரியநேத்திரனால் தாண்ட முடியவில்லை என்பதையும் தேர்தல் முடிவுகள் பதிவு செய்திருக்கின்றன.

ஏழு கட்சிகளும், எண்பத்து மூன்று அமைப்புக்களும் உள்ளடங்கிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினாலும், தமிழரசுக் கட்சியின் சிறீதரன், அரியநேத்திரன் உள்ளடங்கிய அணியினராலும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற எண்ணக்கரு, இந்த ஜனாதிபதித் தேர்தலில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்குப் பின்னால் பல காரணங்கள் உண்டு. அதில், பிரதானமானது, முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் 'சம்பந்தன்- சுமந்திரன்' அணுகுமுறைக்கு மாற்றான அணியொன்றைக் கட்டுதல் என்பதாகும்.

கூட்டமைப்பில் இருந்து 2010 பொதுத் தேர்தல் காலத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தோற்றுவித்தார்.

அன்றுமுதல், சில அரசியல் பத்தியாளர்களும், புலம்பெயர் தரப்பினரும் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அரசியல் சக்தியாக முன்னணியை சித்திரிக்கத் தொடங்கினர். அத்தோடு சம்பந்தனுக்கு மாற்று கஜேந்திரகுமார் என்று நிறுவத் தலைப்பட்டனர். ஆனால், 2015 பொதுத் தேர்தலில் முன்னணியின் படுதோல்வியும், கூட்டமைப்பின் பெருவெற்றியும் 'முன்னணி' மீதான அவர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் பொய்யாக்கியது. அதன் பின்னர், அவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும் கொழும்பிலிருந்து அழைத்து வந்து வடக்கில் முதலமைச்சராக்கிய சி.வி. விக்னேஸ்வரனை மாற்றுத்தலையாக மாற்றத்தலைப்பட்டனர். அந்த வேலையை தமிழ் மக்கள் பேரவை, செய்து வந்தது. அதுவும் பொய்த்துப்போன புள்ளியில், கூட்டமைப்புக்கு, அதாவது சம்பந்தன்- சுமந்திரனின் அரசியலுக்கு மாற்று யார்? என்பது தொடர் தேடல் ஆனது.

அந்தத் தேடலுக்கான பதிலை, கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு சந்தித்த பின்னடைவும், தமிழரசுக் கட்சிக்குள் எழுந்த குழப்பங்களும் சேர்ந்து வழங்கின. அதுதான், இன்றைக்கு தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஆரம்பங்களுக்கு காரணமானது.

ஆக, சம்பந்தன்- சுமந்திரன் அரசியலுக்கான மாற்றுத் தலைமையை நிறுவுவது தொடர்பிலான நீண்ட தேடலை, பொதுக் கட்டமைப்பினர் இப்போது பொது வேட்பாளருக்கான வாக்குச் சேகரிப்பினூடு சாதித்துக் காட்டத் தலைப்பட்டிருக்கிறனர். ஆனால், அதுவும்கூட தமிழரசுக் கட்சியினால் கழற்றி விடப்பட்ட ரெலோ, புளொட் உள்ளிட்ட கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிக் கட்சிகள் மற்றும் தமிழரசின் உட்பிளவுகளினால் அலைக்கழியும் மாவை சேனாதிராஜா, சிறீதரன் போன்றவர்களினால் தோன்றியிருக்கின்றது.

பொதுக் கட்டமைப்பினர், தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற விடயத்தைத் தூக்கிக் கொண்டு அரங்கிற்கு வந்த போதே, இந்தப் பத்தியாளர் அதனை அவசரக் குடுக்கைத்தனமான நடவடிக்கை என்று விமர்சித்திருந்தார்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்குள் இருந்து மாத்திரம் பொது வேட்பாளர் என்கிற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. அதனை, வடக்குக் கிழக்கின் அனைத்து மாவட்டங்களின் தனித்துவமான பிரச்சினைகள், சிக்கல்களை உள்வாங்கி முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால், அவை எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஆரம்பத்தில், பொது வாக்கெடுப்பாக ஜனாதிபதித் தேர்தலை அணுக வேண்டும், அதன் பொருட்டு தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள். அந்த அரசியல் நிலைப்பாட்டுக்குப் பின்னாலுள்ள சிக்கல்களை எடுத்துக்கூறியதும், பொது வாக்கெடுப்பு என்கிற நிலையில் இருந்து விலகி, தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைத்தல் என்ற நிலைக்குள் சுருக்கினார்கள். பொது வாக்கெடுப்பு என்கிற நிலையை இறுதி வரையில் பிடித்துக் கொண்டிருந்தால், இன்று அரியநேத்திரன் பெற்றிருக்கின்ற வாக்குகள், தமிழர் தாயகத்தின் மொத்த வாக்குகளில் சுமார் 14 வீதம் மாத்திரமே. அது, தமிழ்த் தேசிய அரசியலின் பெரும் தோல்வியாக பதிவு பெற்றிருக்கும். நல்லவேளையாக அது நடைபெறவில்லை. மாறாக, தமிழ்த் தேசிய வாக்கு ஒருங்கிணைப்பு மற்றும் சம்பந்தன்- சுமந்திரன் அணுகுமுறைக்கு மாற்றான தலைமைத்துவத்தை கண்டடைதல் என்ற நிலைகளில் நின்று கொண்டது.

சம்பந்தன் – சுமந்திரன் அரசியல் அணுகுமுறைக்கு மாற்றான தலைமைத்துவத்தை, பொதுக் கட்டமைப்பினர் எதிர்பார்த்தது மாதிரி கண்டடைய முடிந்திருக்கிறதா, அரியநேத்திரன் பெற்றிருக்கும் வாக்குகள் அதனைப் பிரதிபலிக்கின்றனவா? என்ற கேள்விகள் முக்கியமானவை. அதனை எந்தவித பூச்சுக்களும் இன்றி நேரடியாக நோக்கினால், அதற்கான பதில் எதிர்மறையானது. ஏனெனில், தமிழர் தாயகம் எங்கும் தமிழரசுக் கட்சியின் முடிவுக்கு மதிப்பளித்த தேர்தல் முடிவுகளே கிடைத்திருக்கின்றன. அதுவும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை, புதிய தலைவராக தேர்வாகி பதவியேற்க முடியாமல் போன சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், சிறீநேசன், யோகேஸ்வரன், பொது வேட்பாளராக நின்ற அரியநேத்திரன் என்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் பொதுக் கட்டமைப்பினரோடு நின்று, பொது வேட்பாளருக்காக வாக்குச் சேகரித்தார்கள். பொதுக் கட்டமைப்பில் ஏற்கனவே ஏழு கட்சிகள் இருக்கின்றன. அதற்குள் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆக, சுமந்திரன், சாணக்கியன், அவ்வப்போது தலைகாட்டிய கலையரசன் ஆகிய தமிழரசின்

தொடர்ச்சி▼





# தமிழரசு எதிர் பொதுக் கட்டமைப்பு: இந்தப் போட்டியில் வென்றது யார்?

தொடர்ச்சி▲

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நின்று வாக்குச் சேகரித்தார்கள். ஏழு கட்சிகள் ஒன்றாய் நின்றன. சிவில் அமைப்புக்களும் இணைந்து நின்றன. ஆனால், அவர்களினால், தமிழரசின் சுமந்திரன் – சாணக்கியன் அணியால், பெற முடிந்த வாக்குகளில் பகுதியளவைக் கூட தாண்ட முடியவில்லை. இதில், வேடிக்கை என்னவென்றால், கிளிநொச்சியின் ஜமீனாக வலம் வரும் சிறீதரனால், கட்சியின் மாவட்டக்கிளையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடிந்ததேயன்றி, அவரினால் கிளிநொச்சி வாக்காளர்களை வெற்றி கொள்ள முடியவில்லை. அவரைவிட சுமந்திரனுக்கு பின்னால் திரண்ட தமிழரசு வாக்காளர்கள் சஜித்துக்கு அதிக வாக்குகளை வழங்கினர். அதில், சந்திரகுமாருக்கான கணிசமான பங்கும் உண்டு.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் சஜித்தின் வாக்குகளைவிட அரியநேத்திரன் ஒரு சில ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றார். அந்த வாக்குச் சேகரிப்பில், சித்தார்த்தன், விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை, ஐங்கரநேசன், சிறீகாந்தா, மணிவண்ணன் போன்றவர்கள், தங்களுக்கான உரித்தைக் கோரி நிற்கிறார்கள். அங்குதான் பொதுக் கட்டமைப்பின் அரசியல் பத்தியாளர்கள் பலரும் இருக்கிறார்கள். ஆயினும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிதான் வென்றிருக்கின்றது. அந்த வெற்றிக்கான உரித்தை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த உழைத்த சுமந்திரன் அணியினர் கோருகிறார்கள். ஏனெனில், அவர்களைத் தாண்டி, தமிழரசுக் கட்சிக்குள் வேறு யாரும் சஜித்துக்காக பிரச்சார நடவடிக்கைகளையே முன்னெடுக்கவில்லை.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில், கரையோரத் தேர்தல் தொகுதிகளில் அரியநேத்திரன் வென்றிருந்தார். அது ஏன் நிகழ்ந்தது என்று தேடினால், 'தமிழ்த் தேசியம் – ஒருங்கிணைவு' என்ற அடையாளங்களுக்கு அப்பாலான ஒரு விடயம் மேலெழுகின்றது. வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அதனைத் தீர்ப்பது தொடர்பில் இந்தியா அக்கறையின்றி, மேலும் மேலும் அத்துமீறும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதாக மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. அப்படியான நிலையில், சஜித் இந்தியாவின் தெரிவு என்ற உணர்நிலையொன்று தமிழ் அரசியல் பரப்பில் எழுந்தது. இந்தியாவின் தெரிவைத்தான் சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் முடிவாக அறிவித்துவிட்டார் என்ற கோபம், மீனவர் சங்கங்கள் உள்ளிட்ட கடற்றொழிலாளர் அமைப்புக்களிடம் உண்டு. அந்தக் கோபம், அவர்களை பொதுக் கட்டமைப்பின் பின்னால் திரள வைத்து, சங்குக்கான வாக்குகளாக மாற்றிவிட்டது. இப்படி, யாழ்ப்பாணத்தில் பொதுக் கட்டமைப்பின் வாக்குத் திரட்சிக்குப் பின்னால், பல சமூகக் காரணங்களும் உண்டு.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 116000 வாக்குகளைப் பெற முடிந்த பொது வேட்பாளரினால், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் முதல் இரண்டு இடங்களுக்குள் ஒருவராக கூட வர முடியவில்லை. கிழக்கில் அது இன்னும் மோசம். முதல் மூன்று இடங்களுக்குள் அரியநேத்திரன் இல்லை. குறிப்பாக, அவரின் சொந்த மாவட்டமான மட்டக்களப்பில் அவர், 36000 வாக்குகளுக்குள் சுருங்கிவிட்டார். நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டார். வழக்கமாக ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சார்பிலான வரைபடத்தில் வடக்கு கிழக்கு – மலையகம் உள்ளடங்கிய தமிழ் பேசும் எண்ணிக்கை சிறுபான்மையினரின் வாக்குகள் சொல்லும் செய்திக்கும் தென் இலங்கையின் செய்திக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் இருக்கும். இந்தத் தேர்தலிலும் அதுவே, பிரதிபலித்திருக்கின்றது. அந்த தெளிவான வேறுபாட்டிற்கான உரித்தாளர்களாக வடக்கு கிழக்கில் தமிழ் வாக்குகளை தமிழரசுக் கட்சியும், (சுமந்திரன் – சாணக்கியன் அணியும்), முஸ்லிம் வாக்குகளுக்கான உரித்தை முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும், மலையக தமிழ் மக்களின் வாக்குகளுக்கான உரித்தை தமிழர் முற்போக்குக் கூட்டணியும் எடுத்துக் கொள்ள முடியும்.

இப்போது, வடக்கு – கிழக்கில் பொதுக் கட்டமைப்பினர் பெற்றுக் கொண்டிருக்கின்ற வாக்குகளை வைத்துக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கையாக எதனை முன்னெடுப்பார்கள் என்ற விடயம் மேலெழுகின்றது.

ஏனெனில், சிறீதரன் எதிர்பார்த்தது போல, ஐந்து லட்சம் வாக்குகளை பொதுக் கட்டமைப்பினரால் பெற முடியவில்லை. அப்படியானால், அதனை தமிழ்த் தேசிய வாக்குகளின் பூரண ஒருங்கிணைவாக கொள்ள முடியாது. தமிழரசுக் கட்சி பெற்ற வாக்குகளில் அரைவாசி அளவை வேண்டுமானால் அவர்கள் பெற்றதாக கொள்ள முடியும். இப்போது, பொதுக் கட்டமைப்பினர் முன்னால் உள்ள சவால், அடுத்து வரும் தேர்தல்களை இந்தக் கட்டமைப்பாக எவ்வாறு எதிர்கொள்வது என்பதுதான். ஏனெனில், பொது வேட்பாளருக்காக ஆதரவாக களமிறங்கி வேலை செய்த தமிழரசுக் கட்சிக்காரர்களை, அந்தக் கட்சி எவ்வாறு கையாளும் என்று தெரியவில்லை. இப்போது, சிறீதரனே தன்னுடைய கோட்டையான கிளிநொச்சியை, சுமந்திரன் அணியிடம் பறிகொடுத்துவிட்டதாக அந்த அணி உரித்து கோருகின்றது. அப்படியான கட்டத்தில், சிறீதரன் எப்படி தன்னை கட்சிக்குள் நிலைப்படுத்துவார்? அவருக்கு எதிரான தமிழரசின் அணியை அவரினால் கையாள முடியாமல் போகலாம். ஏற்கனவே, அவரினால் கட்சியின் மத்திய குழுவைக் கையாள முடியாமல் இருக்கின்றது. இவையெல்லாம் சேர்ந்து, அவரை, பொதுக் கட்டமைப்பின் அங்கமாக மாற்றிவிடும் சூழல் உண்டு.

தொடர்ச்சி▼







# தமிழரசு எதிர் பொதுக் கட்டமைப்பு: இந்தப் போட்டியில் வென்றது யார்?


தொடர்ச்சி▲

பொதுக்கட்டமைப்பினருக்கு தேர்தல் முடிவுகள் உற்சாகம் ஊட்டியிருப்பதாக தெரிகிறது. அவர்கள், புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுக் கட்டமைப்பிலுள்ள முன்னாள் ஆயுத இயக்கங்கள் தவிர்ந்த தரப்புக்கள் ஒன்றிணைந்து புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பது சார்ந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. அந்தக் கட்சியின் தலைவராக சிலவேளை சிறீதரன் வருவதற்கான வாய்ப்புக்களையும் மறுப்பதற்கு இல்லை. முன்னாள் ஆயுத இயக்கங்களை பங்காளிகளாக இணைந்து பொதுக் கட்டமைப்பு பரந்துபட்ட தேர்தல் கூட்டணியாக நிலைபெறும் நோக்கைக் கொண்டிருக்கின்றது. அப்படி நடைபெற்றால், பொதுக் கட்டமைப்பினால் யாழ்ப்பாணத்தில் குறைந்தது இரண்டு ஆசனங்களை வெற்றிகொள்ள முடியும். அது போல, வன்னியில் முயற்சித்தால் ஒரு ஆசனத்தை பெறலாம். அத்தோடு ஒரு தேசியப்பட்டியல் கணக்கும் அவர்களிடத்தில் இருக்கிறது. அப்படியான கட்டத்தில், சம்பந்தன் – சுமந்திரனின் அரசியலுக்கு மாற்றாக தங்களை நிரற்படுத்திக் கொள்ள முடியும் என்று பொதுக் கட்டமைப்பினர் நம்புகிறார்கள். ஆனால், அவர்களினால் கிழக்கில் எப்படியான அடைவுகளைக் காட்ட முடியும் என்பது முக்கிய கேள்வி. ஏனெனில், அவர்களினால் கிழக்கில் ஒரு ஆசனத்தைக்கூட வெற்றிபெறும் அளவுக்கான வாக்குகளை பெற முடியவில்லை. பொதுக் கட்டமைப்பினரின் எதிர்காலப் பயணத்தினால் பாதிக்கப்படப் போகும் தரப்பினர், முன்னணி அடையாளத்தோடு இருக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸினர்தான். தமிழரசு உள்ளடங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான வாக்குகளை இதுவரை காலமும் குறிவைத்து கவர்ந்து வந்த முன்னணியினர், அதனை பொதுக் கட்டமைப்பினரிடம் இழப்பார்கள்.

தேர்தல் முடிவுகள் என்ன செய்தியைச் சொல்கின்றன என்பதை அரசியலில் நம்பிக்கையும் ஆர்வமும் உள்ளவர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தல், தமிழ்த் தேசியப் பரப்பில் தெளிவான சில செய்திகளை சொல்லியிருக்கின்றன. அதனை உள்வாங்கி பிரதிபலிக்க வேண்டும். இனி, தமிழ்த் தேசிய அரசியல் யாழ்ப்பாணத்துக்குள் தமிழரசு எதிர் பொதுக் கட்டமைப்பாகவும், யாழ்ப்பாணத்துக்கு வெளியே தமிழரசின் ஏகபோகமாகவும் நிலைபெறலாம்.

# புதிய ஜனாதிபதிக்கு ஹக்கீம் வாழ்த்து





புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்திருக்கின்றார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

தேர்தலில் இலங்கை மக்கள் தமது திடவுறுதியை வெளிப்படுத்தியுள்ள நிலையில்,புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் அவரது சகாக்கள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு தேசப்பற்றுடன் ஜனநாயகத்தின் உண்மையான உணர்வோடு இந்த வெற்றியை நாங்கள் நிலைநிறுத்துவோமாக.

நமது தேசத்தின் இதுகாறும் தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்தி செய்யவதற்கான ஒளி இப்போது புதிய அணியினர் ஊடாகப் பாய்ச்சப்படுகின்றது. நாட்டின் அரசியலில் ஒரு புதிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம், பல சவால்களை எதிர்கொள்வதற்கான திராணியை வளர்த்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய இச்சந்தர்ப்பத்தில், பிராந்தியத்துடனும், சர்வதேசத்துடனும் சமாதானத்திற்காக ஒத்துழைக்கும் தோழமையை அனைத்து இலங்கையர்களும் வரித்துக் கொள்வோமாக.

இதே வேளையில்,நாம் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கும் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்களுடைய காலத்தையும் நேரத்தை அர்ப்பணித்து, பெறுமதியான வாக்குரிமையைப் பயன்படுத்திய சகல சமூகங்களையும் சேர்ந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக. – என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -23.09.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலி மற்றும் பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை உதவிகரமாக இருக்கும்.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைக்குள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சிறிது கவனமுடன் இருக்கவும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல்பொறுப்புகள்காரணமாகபணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -23.09.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். உங்கள் பணத்தை நீங்கள் சிறப்பாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களைமேம்படுத்திக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்கள் நம்பிக்கை மற்றும் மன திடம் காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





